**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1024/2024
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சொர்ணலெட்சுமி | -- | |
| Husband's Name | கண்ணராஜ் | Calling | இல்லத்தரசி |
| Village | இராமச்சந்திராபுரம் | Religion | |
| Taluk | வத்திராயிருப்பு | Age | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused Present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வத்திராயிருப்பு தாலுகா எஸ்.இராமச்சந்திராபுரத்தில் குடியிருந்து வருகிறேன், இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1 கண்ணராஜ் எனது கணவர். அவர் தறி செட்டு தொழில் செய்து வருகிறார். எங்களுக்கு தினேஷ்குமார், ஆகாஷ்குமார் என்ற இரு மகன்கள் இருக்கிறார்கள். இவ்வழக்கில் இறந்துபோன ஆகாஷ்குமார் எங்களது இளையமகன் ஆவார். அவர் B.Pharm படித்து முடித்துவிட்டு விற்பனை பிரதிநிதியாக வேலை பார்த்து வந்தார். 30.11.2023ம் தேதி மாலை 06.45மணிக்கு நானும், எனது கணவரும் வீட்டிலிருந்த போது எனது மகன் ஆகாஷ்குமாரின் நண்பரான பார்த்திபன் என்பவர் எனது கணவருக்கு போன் மூலமாக என்னுடைய மகன் ஆகாஷ்குமாருக்கு மாயத்தேவன்பட்டி விலக்கு அருகில் வைத்து அவருக்கு எதிர்த்தாற்போல் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் மோதி எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டிருப்பதாகவும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாகவும் தெரிவித்தார். நானும், எனது கணவரும் உடனடியாக திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தோம். எனது மகனை ஆம்புலன்சில் வைத்திருந்தார்கள். எனது மகன் இறந்த நிலையில் காணப்பட்டார். இது சம்மந்தமாக நாங்கள் காவல்துறையில் புகார் கொடுத்தோம். எனது மகனின் மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் வைரம் என்றும், மாயத்தேவன்பட்டியைச் சேர்ந்தவர் என்றும் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் எனது கணவரை விசாரித்து விட்டு என்னிடமும் கேட்டார்கள். வைரம் என்ற நபர் என் மகனை மோதி விட்டதாக எனது கணவர் தான் என்னிடம் சொன்னார். விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணியாமல் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று சாலையில் கடந்து சென்ற நபர் மீது என் மகன் மோதித்தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. என் மகன் அன்றைய தினம் தலைக்கவசம் அணிந்திருந்தால் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.19 11:43:52 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**